# மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை செய்துகொள்வதால் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கலாம்



40 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்கள், இருபாலினர், மாற்றுப் பாலினத்தவர் மற்றும் இருபாலிலியினர் மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை செய்துகொள்ளலாம்.

# மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை செய்துகொள்ளுதல்

மேமோகிராம் மூலம் மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை செய்துகொள்வதால், சிகிச்சை செயல்பட நல்ல வாய்ப்புள்ள ஆரம்பத்திலேயே புற்றுநோயைக் கண்டறியமுடியும்.

மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை செய்துகொள்வது உங்களுக்கு ஏற்றதா என்பதைத் தீர்மானிக்க உதவ உங்கள் குடும்ப மருத்துவர் அல்லது செவிலியிடம் பேசுங்கள். உங்களுக்கு 40 முதல் 49க்குள் வயது இருந்தால், நீங்களும் Health811 அழைக்கலாம்.

# மேமோகிராம் நேர ஒதுக்கீட்டைச் செய்வது எப்படி

மேமோகிராம் பாதுகாப்பானவை. இது இலவசமாகக் கிடைக்கிறது. அத்துடன் குடும்ப மருத்துவர் அல்லது செவிலியிடமிருந்து ஆர்டர் பெறாமலேயே நீங்கள் பெறலாம்.

அமைவிடத்தைக் கண்டறிய **ontariohealth.ca/breast-screening-locations** வருகை தாருங்கள் அல்லது அழையுங்கள் 1.800.668.9304.

**Ontario Health**
Cancer Care Ontario

இந்தத் தகவல்களை அணுகக்கூடிய வடிவில் பெற வேண்டுமா?
1-877-280-8538, TTY 1-800-855-0511, info@ontariohealth.ca.
Tamil CQP-183613